# ஆத்மஜோதி.



"உயிர்க்குயிராய், ஆடுங்கருணைப் பரஞ்சோதி அருளைப்பெறுதற்கு
அன்புநிலை, தேடும்பருவமிது கண்டீர் சேரவாருஞ் செகத்தீரே"

# பொருளடக்கம்.


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| நடராஜர் | …… | … 225 |
| நடராஜ சரணம் | சுத்தானந்த பாரதி | … 226 |
| குருவழிபாடு | ஆசிரியர் | .. 227 |
| மணிமொழி | கிருபானந்தவாரி | … 232 |
| சாதகன் | சாது ஸ்ரீ முருகதாஸ் | … 233 |
| ராமநாமம் … | … | … 235 |
| ஆத்ம . சாதனங்கள் | ஸ்ரீசுந்தரம்மாள் ராகவாச்சாரி | … 237 |
| மகாத்மா . மொழிகள் | .. | … 239 |
| தர்ம…சக்தியும் | டர்பன் திரு ச. மு. பிள்ளை. | … 240 |
| பாடல்நெறி | கா பொ. இரத்தினம் | … 242 |
| அவதாரபுருஷர்கள் | விவேகானந்தர் | … 246 |
| மணி ..மரதனோட்டமும் | மு. நல்லதம்பி | .. 248 |
| உண்மைத் துணுக்குகள் | உமா | … 249 |
| கிரிதரலால் சரித்திரம் | பக்தி | … 250 |
| மகாத்மா.. மொழிகள் | ….. | … 251 |
| அறிவும்—அறியாமையும் | க. திருநாவுக்கரசு | … 252 |
| மனிதனும்-மதமும் | நீ. மனோகரன் | … 253 |
| செய்தித்திரட்டு | … | ….. |




# ஆத்மஜோதி.

ஓர் ஆத்மீக மாதவெளியீடு.

சந்தா விபரம்

ஆயுள்சந்தா ரூ. 75/- வருடசந்தா ரூ 3/-
தனிப்பிரதி ச. 30.

"ஆத்மஜோதி" நிலையம், நாவலப்பிட்டி. (சிலோன்)

ஓம்

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

| சோதி 2. | விகிர்தி ஸு ஆனி மீ | சுடர் 8. |
|---|---|---|

## நடராஜர்.

'தோற்றந் துடியதனிற் றோயுந்திதி யமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
யூன்று மலர்ப்பதத்தி லுற்றதி ரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு."

"குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால் வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற்பாதமும் காணப்பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே"

"சீராருஞ் சதுமறையும் தில்லைவா ழந்தணரும்
பாராரும் புலி பனியும் பதஞ்சலியும் தொழுதேத்த
வாராருங் கடல்புடைசூழ் வையமெலாம் ஈடேற
ஏராரு மணிமன்றுள் எடுத்ததிரு வடிபோற்றி"

"சேர்க்கும் துடிசிகரஞ் சிக்கனவா வீசுகரம்
ஆர்க்கும் யகரம் அபயகரம்—பார்க்கிலிறைக்(கு)
அங்கி நகரம் அடிக்கீழ் முயலகனார்
தங்கும் மகரமது தான்"

# நடராஜா சரணம்.

பல்லவி.

நடராஜா சரணம் — என துகுரு
நாதா உன் சரணம் (நட)

அனுபல்லவி

சுடரோங்கிய பரஞ் சோதிப் பொருளே-சக்தி
சுந்தரியுடன் உன்னைச்
சந்ததம் சிந்தித்தேன் (நட)

சரணம்

சித்த சுத்தியுடனே சிற்சபை யிலேகூடி
தியானத்திலே லயித்த ஞானத்துடனே பாடி
பக்திப் பரவசத்தில் தத்திமி என்றாடி
பரமானந்தர் பெறும் வரமே நாடினேன்
பரிந்தருள் புரிந்தெனுள்
நிரந்தரம் இருந்தருள் (நட)

## தூக்கிய திருவடி.

பல்லவி

தூக்கிய திருவடி துணையென நம்பினேன்
துரிய நடராஜனே (தூக்)

அனுபல்லவி

ஆக்கி யளித்துலகை நீக்கி மறைத்தருளி
ஐந்தொழில் புரிந்திடும் அம்பல வாணனே (தூக்)

சரணம்

எத்தனை யோபிறவி எடுத்தெடுத் தேயிளைத்தேன்
இருவினைப் பயன்களை எய்தி யெய்திக் களைத்தேன்
சித்தம் இனியுன்மேல் வைத்திருக்க நினைத்தேன்
திக்கு வேறில்லை ஐயா தீனரைக்காக்கும்மையா (தூக்)

சுத்தானந்த பாரதி

# குருவழிபாடு.

(ஆசிரியர்)

ஆதியும் அந்தமுமற்று, வாக்குமனம் இரண்டையுங்கடந்து தாக்கற்று நிற்குந்தனிப்பரம்பொருளை வெவ்வேறுமதத்தினர்வெவ்வேறு விதமாக உபாசிக்கின்றனர். ஒரு நாமமுமில்லாதஅதனை ஆயிரந்திருநாமங்களால் போற்றுவோர் அநேகர்; ஒருவடிவினுமடங்காத அதனைப் பல்வேறு வடிவங்களாகப் பாவித்துப் பரவுவோர்பலர்; திருவாகக்கொள்வோர்சிலர்; அருவுருவாகவும்அருவாகவும் வழிபடுவோர் வேறுசிலர். இவ்வித வேற்றுமையான மார்க்கங்களெல்லாம் குருவழிபாட்டில் ஒற்றுமையடைகின்றன. எல்லாமதத்தினரும் ஏற்றுக்கொள்ளும் கொள்கை குருவழிபாடு ஒன்றுதான்.

பௌத்தம், சமணம், கிறிஸ்தவம், இஸ்லாம், சீக்கியம்முதலாய சரித்திரகால மதங்களைத் துருவி ஆராய்ந்தால் , குரு வழிபாடே அவற்றின் அடிப்படைக் கொள்கையாக இருந்ததைக் காணலாம். பகவான் புத்தரை ஆரம்பத்தில் ஆதரித்த மன்னனும் விம்பசாரன் அவரை ஓர் பரமாசாரியராகவே வணங்கினான். வடமொழியில் புத்தருக்குள்ள மறுபெயர்களுள் "சாஸ்தா"வும் ஒன்று. "சாஸ்தா" என்பதற்கு ஐயன், ஆசான், குரு என்பனபொருள். இக்காரணம்பற்றியே திவாகரம்புத்தரை 'அருங்கலைநாயகன்' என்றும். சூடாமணிநிகண்டு 'நண்ணியகலைக ட்கெல்லாம்நாதன்" என்றும், விளக்குகின்றன. பின்னுளில் "சாஸ்தா" தமிழில் "சாத்தன்" "சாத்தனர்" எனக்கருத்து மாறுமலே திரிபுபெற்றது. வைஷ்ணவர்கள் புத்தரை மகாவிஷ்ணுவின் அவதாரமாக்கி பௌத்தஆலயங்களை மாற்றிக்கொள்ள, சைவர்கள் அவரை சிவபெருமானுக்கும்திருமாலுக்கும் பிறந்தஐயனுராக்கி (அரிஹரபுத்திரர்) கிராமங்களெல்லாம் அவனுக்குக் கோயில்கள் அமைத்தனர். மலையாளத்தில் இன்று காணப்படும் ஐயப்பன் வழிபாடு இந்தமுறையில்தோன்றியதென்பதே ஆராய்ச்சியாளார்தக்க ஆதாரங்களுடன் கண்ட

முடிபாகும். குருவணக்கம் நாளடைவில் எவ்விதம் தெய்வவழி பாடாகமாறியதென்பதைஎடுத்துக்காட்டவே இந்தவிளக்கந்தந்துள்ளோம்.

இந்துமத சம்பிரதாயத்தை ஆராயும்போது, மேலே தரப்பட்டுள்ள விளக்கத்திற்கு எதிர்மாறான கொள்கையைக்காண்கின்றோம். ஆத்மீகவாழ்வின் ஆரம்பதசையில், பக்தியின் முதற்படியில், கடவுளெனத் தோன்றும் ஆண்டவன் அருளானது இரண்டாவது படியில் குருவாய் வந்து ஆட்கொள்ளுகின்றதென்பதே இந்துமத சாரம்.

"மூர்த்திதலம் தீர்த்தம் முறையாய்த் தொடங்கினர்
வார்த்தைசொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

என்கின்றார் தாயுமானவர். எனவே மூர்த்திவழிபாடு, தலயாத்திரை, தீர்த்தமாடுதல் மூன்றும் முதலில் அத்தியாவசியகமானசாதனைகளாகின்றன. அவற்றினால் மனம் பரிபக்குவம் அடைந்தமாந்தர்க்கே உண்மையானகுருவின் கடாட்சம் கிட்டுமென்பதும் அவரின் கருணையும் உபதேசமுமின்றி எவருக்கும் ஆத்மீகவாழ்வில் பூரணமடைதல் முடியாதென்பதும் வெளிப்படை, மிகச் சிலபக்குவிகளுக்கே இறைவன் அறிவுக்கறிவாய் உள் நின்றுதத்துவநிலையை உணர்த்துவதுண்டு. ஏனையோர்க்கு,

"குற்றமெலாநீத்துக் குணமனைத்துஞ் சேர்ந்தாலும்
சுற்றமெலா ரீத்துத்துறந்தாலும் —சொற்றபல
செய்தவங்கள் செய்தாலுந்தேசிகனைக் கூடுமள
வெய்துவரோவின்பநிலை"

என்னும் பொது நியதியேபொருத்தமாகும். சங்கரர், ராமானுஜர், மாணிக்கவாசகர், ஞானசம்பந்தர், மங்கையர்க்கரசியார், மெய்கண்டார், குமரகுருபரர், தாயுமானார், விவேகானந்தர் முதலாம் மகான்களின் வாழ்விலும் வாக்கிலும் இந்த உண்மை அருமையானவிளக்கம் பெற்றுள்ளது. குருஉபதேசமின்றியே கோதறுமெய்ஞ்ஞானக் கொழுந்தாங் குருமூர்த்தியான ஸ்ரீரமணதேவர் அருளியுள்ள வாக்கின்படி சற்குரு சர்வேச்வர சொரூபமாகும். பரமபதத்தை அல்லது ஆத்மஞானத்தை விரும்பி நிஷ்காமிய பக்திசெய்யும் சீவனுக்கு அனுக்கிரகஞ்செய்யசர்வேச்வரனே அப்பக்தியின் முடிவில் தனக்கு இயல்பான சத்து, சித்து, ஆனந்தம்

என்ற மூன்று அர்சங்களோடு கருணையால் நாமரூபமென்ற மற்றிரண்டு அம்சங்களையுங் கொண்டு மனிதனுல் வெளிப்படுகிறார். எனவே குருவும் கடவுளும் உண்மையில் வேறல்லர். ரமணரைப்போலவே அவருக்கு ஐந்நூறு ஆண்டுகட்கு முன் அருணஜோதியிற் கலந்த அருணகிரிநாதரின் வாழ்க்கையோ இந்த இலக்கணத்திற்கு ஓர் ஒப்பற்ற இலக்கியமாகும். அவர் பாட்டால் அர்ச்சித்த முருகப்பெருமானிடம் கேட்டுக்கொண்ட வரங்களெல்லாம், இறுதியான அனுபூதிநிலையில் 'குருவாய் வருவாய் அருள்வாய் குகனே' என்ற ஒரு தனிப்பிரார்த்தனையில் அடங்கிவிட்டன.

உலகின் தொல்பெரும் மக்களான தமிழரின் ஆதித்தெய்வமாம் முருகன் சாதி, மத, பேதமெல்லாம் கடந்துநிற்கும் சமரஸக் கடவுளாவர். அவரே உலகின் முதல் குருவுமாவர். ஏனைய குருமார்களெல்லாம் அவரது வழிபாட்டைப் பின்பற்றித் தோன்றியவர்களே. இராமரும், கிருஷ்ணரும், புத்தரும் வருவதற்குப் பல நூற்றாண்டுகட்கு முன்னரே உலகெங்கும் பரவியிருந்த சிவமதம் அவருக்கு 'சிவகுரு' என்னுந்திருநாமம் சூட்டியிருப்பதொன்றே முருகப்பெருமானின் தொன்மைக்குப் போதிய சான்றாகும். சனற் குமாரராய்வந்தவர் அவரே; இருபதாம் நூற்றாண்டில் ஜகத்குருவாய் விளங்கிய ரமணரும் அவரே. இவ்விருவர்கட்கிடையே வடக்கே குமரிலபட்டராகவும் தெற்கே திருஞானசம்பந்தராகவும் அவதரித்தவரும் அவரே. சென்ற நூற்றாண்டில் ஞானசம்பந்தப்பெருமானைக் குருவாகக்கொள்ளும்பேறுபெற்ற இராமலிங்கசுவாமிகள் அவர் தம்மையடைவோர்க்கெல்லாம் கடவுளைக் காட்டியவண்ணம் என்றும் இருப்பவர் என விளக்கி,

"பயிலுமூவாண்டிற் சிவைதருஞானப்
பான் மகிழ்ந்துண்டு மெய்ந்நெறியாம்
பயிர்தழைந் துறவைத்தருளிய ஞானசம்
பந்தனென்றோங்கு சற்குருவே"

என்று போற்றியிருப்பதை உற்றுநோக்குக. சீகாழி கண்ணுடைய வள்ளல் அருளிய 'ஒழிவிலொடுக்கம்' என்னும் நூலின் சிறப்புப்பாயிரச்செய்யுளின் 'வள்ளல் குருராயன் வாதுவென்ற சம்பந்தன்' எனவரும் முதல்வரியில், சம்பந்தப்பெருமானுக்குச் சிறப்பிற் சிறப்பாய காரணப்பெயராங் 'குருராயன்' என்பது

'வாதுவென்ற சம்பந்தன்' என்பதற்குமேல் நிற்கவைத்துள்ள சிறப்பின் நுட்பத்தை நோக்கும்போது, அவர் சம்பந்தராய் அவதரிக்குமுன் குமார சற்குருவாய் அரனுக்கும் அகத்திய முனிக்கும் உபதேசித்தருளிய உண்மை குறிப்பால் அறியக்கிடக்கின்றது. அவர் வேதாகமாதிகளை ஓதாதுணர்ந்த மூதறிவாளரென்பதும், அவற்றை ஓதிஉணர்ந்த ஆசாரியர்கட்கெல்லாம் அவரவர் அறிவின்கண் அருளுருவாய் நின்றறிவித்தும், ஆசாரியவடிவில் வெளிநின்று திருநோக்கம் முதலாய அறுவகைத் தீக்ஷைகளால் ஏனைய மக்களுக்கு அநுக்கிரகஞ்செய்யும் பெருமையரென்பதும் 'குருராயன்' எனும் திருநாமம் விளக்கும் உண்மைகளாகும்.

இவ்விதம் குருவழிபாட்டிற்குத் தனிப்பெருமை அளித்த தென்னாட்டில், குருவழிபாடு, கடவுள் வழிபாடு, அடியார்வழிபாடு மூன்றையும் ஒன்றுசேர்த்துக் குருலிங்க சங்கம வழிபாடு எனக் கூறும் சைவமரபுவளர்ந்த தமிழ்நாட்டில் இன்று குருவழிபாடு பெரிதும் மறைந்துவருகின்றது. வடநாடு இதுவிஷயத்தில் அவ்வளவு மோசமான நிலையில் இல்லையெனலாம். உண்மையான சாதனையற்ற வெறுஞ்சாஸ்திரப்படிப்பே இச்சீர்கேட்டிற்கு முக்கிய காரணமாகும். முப்பொருள் விரித்தும் மும்மலங் குறித்தும் பலர் நீண்ட உபந்நியாசங்கள் செய்வார்கள்; ஞானகுருவினுடைய உபகாரமின்றி உயர்ந்த அநுபூதி நிலையை யடையமுடியாதென்பது சைவத்தின் உறுதியான கொள்கையென வற்புறுத்துவார்கள்; சமயதீக்ஷை, விசேடதீக்ஷை பெற்று சிவபூசை செய்வதில் தவறுர்கள். ஆனல் மும்மலங்களையும் ஒரு திருநோக்கால் போக்கும் சிவஞானிகள் முன்னின்றபோதும் இந்த மூடர்கள் காண்பதில்லை. அவர்கள் மூலமே நமது மதசம்பிரதாயம் நிலைபெற்றிருக்கிறதென்பதை இவர்கள் உணர்வதில்லை. சமய உலகில் நாஸ்திகர்கள் செய்யுங் கேட்டினும்பார்க்கப் பன்மடங்கு தீங்கை இந்தப் படித்த பதர்களே செய்கிறுர்கள்.

புத்தகங்களின் உதவியைக்கொண்டோ அல்லது அவற்றைப் படித்துள்ள பண்டிதர்களின் உதவியைக்கொண்டோ சாஸ்திரங்களின் சாரத்தை அறியமுடியாது; அவற்றின் நோக்கமான ஆத்மீக எழுச்சியைப் பெறமுடியாது. ஒரு மனிதனுக்கு அவனை மேலெழச்செய்யும் உணர்ச்சி இன்னுமொரு மனிதனிடமிருந்தே வரவேண்டும். எந்தமனிதரிடமிருந்து அவ்வித உணர்ச்சி கிடைக்

கின்றதோ, எவரது சந்நிதி மாத்திரத்தில் ஆத்மசாந்தியும் ஞான எழுச்சியும் தோன்றுகின்றனவோ, அவர்களே ஆசாரியர்களாவர். அவர்கள் எதுவும் பேசாரேனும் அவர்கள் எண்ணம் நிறைவேறும்; அவர்கள் உண்மை எங்கும் பாவும். அவர்களது உறவால் ஜீவராசிகள் புனிதமடைகின்றன; அவரவர் அன்பிற்கும் அறிவிற்கும் பக்குவத்திற்கும் பொருந்த ஆத்மவளர்ச்சியும் பேரின்பமும் பிறக்கின்றன. பிரம்மத்தை அறிந்த ஞானிகள், ஆத்மசித்தி பெற்ற மகாபுருஷர்கள், என்றும் உளர். நமது உள்ளத்திலிருந்து ஆர்வக்கனல் பொங்கி எழுந்தால், அவர்களது அருள்மாரி இறங்கவேசெய்யும். 'தேடுக கிடைக்கும், தட்டுக திறக்கும்' எனும் வாக்குப்பொய்யாகாது.

வாழ்வின் எல்லாத் துறைகளிலும் போலிச்சரக்குகள் மலிந்து கிடக்கும் இக்கலிகாலத்தில் கபடச்சாமிகளும் வேடதாரிகளும் பெருகிவருவதில் வியப்பொன்றுமில்லை. திடீரெனத்தோன்றும் உணர்ச்சிகாரணமாக எவரையுங் குருவாக அங்கீகரிக்கவேகூடாது என்பதற்கு இது ஓர் நல்ல எச்சரிக்கை. மெய்யான குருவாக ஒருவரை ஏற்குமுன் அவரை நீண்டகாலம் கவனிப்பது அவசியமாகின்றது. சுவாமி விவேகானந்தரின் உபதேசம் இவ்விஷயத்தில் மிகவும் அருமையானதாகும். ராமகிருஷ்ணர் போன்ற ஓர் அவதார புருஷரைக்குருவாக ஏற்குமுன் அவரைஎவ்வளவோகாலம் எத்தனையோ விதத்தில் பரீட்சித்துப்பார்த்தனர். பரமஹம்ஸரே அக்குணத்தைப் பாராட்டியுமுள்ளனர். எவரிடத்தில் குருபீடஆசை, சீடரைச்சேர்க்கும் விருப்பம், பிறர் தம்மை வணங்குவதில் திருப்தி முதலாய குணங்கள் தோன்றுகின்றனவோ அவர்களின் ஆத்மீகவாழ்வின் லட்சியம் தவறான வழியிற் செல்லுகிறதென்பதை அறிந்துகொள்ளவேண்டும். சீலம் நிலைக்குமுன் எழுந்த குண்டலிசக்தியைக்கொண்டு சில்லறைச் சித்திகளால் மக்களின் மனத்தைக் கவரும் ஆசாமிகளும் உளர். அவர்களின் உறவை நாடுமுன் அவர்களின் நடத்தையை நன்குகவனிப்பதே அறிவுடைமை. குரு-சீட வாழ்வில் இவ்விதமான பல அபாயங்கள் எப்போதும் உண்டென்பதை வற்புறுத்தவே திருமூலர்,

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்டம் ஆடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

# மணிமொழி.

எந்தவேளையும் இறைவனை நினைக்கவேண்டும். அது உன்னால் ஆரம்பத்தில் முடியவில்லையானால் மூன்று வேளைகளில் தவறாமல் நினை.

2. எழுந்தவுடன் இறைவனை ஒருகணமாவது நினை.
"இறைவனே இன்றுநான் நல்வழியில் நிற்க அருள்செய்" என்று தொழு.

1. உணவு உட்கொள்ளும்போது நினை.
"இறைவனே! இந்த உணவினால் எனக்கு நல்ல அறிவும் ஆயுளும் அன்பும் உண்டாக அருள்புரி" என்று தொழு.

3. படுத்து உறங்கும்போது நினை. "இறைவனே இன்று நான் செய்த குற்றங்களைப் பொறுத்தருள் என்று தொழு.

கற்பதும் கேட்பதும் இறைவனை யடைவதற்கே. கல்வியின் பயன் அதுவே. பட்டம் பெறுவதற்கென்றும், சிறந்தஅறிவாளி யென்று பிறர் மெச்சுவதற்கென்றும் கூட்டத்தினின்று மொழிக்கு மொழி தித்திக்க இனிமையாகவும் சதுரப்பாடாகவும் பேசுவதற்கென்றும் படிக்காதே.

கல்வியின் பயன் கடவுளை யறிதல்.

கிருபானந்தவாரி

---

முற்பக்கத்தொடர்ச்சி

என ஈராயிரம் வருடங்களுக்கு முன்னரேயே அரியதோர் எச்சரிக்கை தந்துள்ளார்.

"திடஞானி தெரிசனமே தீர்த்தமாடல்
திடஞானி தெரிசனமே தேவபூஜை
திடஞானி தெரிசனமே ஜெபதபங்கள்
திடஞானி தெரிசனமே செயுமறங்கள்
திடஞானி தெரிசனமே சிவத்தைக்காணல்
திடஞானி தெரிசனமே சிவத்தின்சேவை
திடஞானி தெரிசனமே மேவுதற்கு
திருவிதமா முலகத்து மரிதாமியார்க்கும்."

# சாதகன்.

(சாது ஸ்ரீ முருகதாஸ்)

சமுத்திரம் என்பது பெரியது. அதில் சேரும் நதிகள் கணக்கில. ஒவ்வோர் நதியின் ருசி குணம் தனித்தனியாக இருக்கத்தான் செய்கிறது. காவேரி வண்டல், விளைவுக்கு நல்லது. தாம்பிரபரணித் தண்ணீர் மூலிகைச் சத்து உள்ளது; உண்ணத் தக்கது. இதுபோன்று பல நதிகளுக்கும் குணம், நிறம் வகுத்து எழுதலாம். ஆனால் நீர்த்தன்மையின் குணமில்லை. பாயும் நிலத்தைப் பொறுத்துள்ளது குணம், நிறம்முதலியன. இதுபோல் ஆதி பரம்பொருள் என்பது ஒன்று. அதை அடைய முயலும் சாதனைகள் பல. காலதேச வர்த்தமானங்களுக்கும் சாதகனுடைய மனோ வைராக்கியத்திற்கும் தக்கபடி சாதனைகள் கொள்ளப்படுகின்றன.

சாதனை என்பது முயற்சி என்ற சொல்தான். "காவேரித்தண்ணீர் சாப்பிட்டவனல்லவா? அந்த வண்டல்புத்தி எங்குபோகும்?" என்பான் தாம்பிரபரணி நீர் உண்டு வளர்ந்த மகன். "குசும்பு பிடித்தவன்; பார்த்தால் பசு; பாய்ந்தால் புலி; தாம்பிரபரணித் தண்ணியல்லவோ?" என்பான் காவேரியின் மகன். இப்படி நீரின் தன்மை சேருமிடம் தெரியாதவன் பேசுவதுபோல் ஓர் சாதகன் மற்றொருவனிடம் வித்தியாசம் காண்பது இயற்கையாகப் போய் விட்டது.

பிறர் தன் நிலையில் உள்ள தவறைக் குறித்தாலும், அல்லது மேலான நிலையில் வாழ்ந்தாலும், சகிக்க அறியாதவர்தான், பெரும்பகுதியான சாதகர்கள். ஒருவர் குறை, புகழ் ஒருவர்க்கொருவர் பாராது, சேருமிடமுணர்ந்து, சாதனை செய்ய அறிந்தவன் ஞானி ஆகிறான். படிப்போ, புகழோ அளிக்கமுடியாத அகண்ட அமைதியை உண்மையான சாதகன் அடைந்துவிடுகிறான்.

சாதகன் தானும் தப்பு செய்யாமல், பிறரும் தன்னிடம் குறை காணாதவாறு நடந்துகொள்ளப் பழக வேண்டும். உலகம் விசித்திரமான தேவியின் திருவிளையாடற் கூடம். அதில்எல்லாம் நடக்கும். எல்லாம் மறந்தவன் முன் அவள் காண்பாள் மனித

உடல் தாங்குபவன் எவ்வளவு தியாகமும், அன்பும், சத்தியமும் நிறைந்தவனாக இருந்தாலும், ஒரு சிலராவது குறைகூறக்கேட்டே தீருவான். அதுவும் அற்று அவன் இருக்க முடியாது.

உண்மைச் சாதகன் "உலகமெல்லாம் அவள் ஆடல்; நான் அவள் கைக் குழந்தை; எனக்குப் பேசத் தெரியாது; எனக்கு தினம் அவள் காட்சிதான் இன்பம், நான் அவள் அளிக்கும் ஆனந்தப் பால்தான் உண்பேன்; என்னை அவள் கைவிடாள்; நான் அவளை மறக்கமாட்டேன்; அவளை மறந்தால் நன்றியற்ற தன்மை; உயிர் மறந்தாலும் அவளை விடாப்பிடியாகப் பற்றுவேன் சத்குருநாதன் அருளிய ஞானமொழிகளான 'ஓம் பராசக்தி' என்ற நாத உபதேசத்தை மறவேன்; பொருள், புகழ், அழகு, பலம், மரியாதை, சுற்றம் எது என்னை விட்டாலும் நான் 'ஓம் பரா சக்தி' என்ற சொல்லை மட்டும் விடமாட்டேன்; இதனால் என்னை உலகம் வெறுத்து சித்திரவதை செய்தாலும் 'ஓம் பராசக்தி' என்றே சொல்வேன்" என்பான்.

"கற்றூணைப் பூட்டியோர் கடலினில் பாய்ச்சினும் நற்றுணை யாவது நமச்சிவாயவே" என்ற வாக்கு எனக்கு ஊன்றுகோல் நான் யார்க்கும் அடிமை இல்லை. அன்பு கொண்டார் கால்களில் நான் செருப்பு. அஞ்ஞான இருளைப் போக்குவதில் "ஓம் பரா சக்தி" என்ற வாக்கு ஒப்பற்ற திரிபுராரியின்நெற்றிக்கண் நெருப்பு எனக்கு துக்கம் செய்யவோ, வினையுண்டாக்கவோ முடியாது எனக்கு விரோதி என்று கிடையாது. இருந்தால் பராசக்தியை மறந்த நான் தான் அந்த விரோதி. பராசக்தி விரோத சப்தத்தை யே ஒழிப்பாள்.

"அபகார நிந்தை பட்டுழலாதே
அறியாத வஞ்சரைக் குறியாதே
உபதேச மந்திரப் பொருளாலே
உனைநான் நினைந்தருள் பெறுவேனோ"

என்ற வாக்கு என் பிரார்த்தனை. எங்கும் நிறைந்த தேவி என்னைக்காப்பாள்; என்று நித்தம் தன்னை உணர்ந்து பேசிப்பாடி அவளையுணர, உலக வெறுப்போ, மதிப்போ இன்றி வாழ்பவனை, எவ்வித அபவாதமும் அணுகாது. அவைகள் ஒளியைக்கண்டு மறையும் இருட்டைப்போல் அவனைவிட்டு மறையும்.

# ராமநாமம்.

[மகாத்மாகாந்தியடிகள் ஆங்கிலத்தில் எழுதியநூலின் மொழிபெயர்ப்பு)

## 8-ம் அத்தியாயம்.

## என்றும் பொன்றாத்துணை.

"ராமநாமமே" என்றும் பொன்றாத் துணையாகும் என்பதில் எள்ளளவேனும் ஐயமில்லை. உள்ளமுருக உணர்ந்து கூவின ஒவ்வொரு தீய எண்ணங்களையும் ஓட்டிவிடும். தீய எண்ணத்தின் ஒழிப்பே தூய்மையாகும். பதில் தூய செய்கைவேறென்றுவேண்டியதில்லை. திண்ணிய மனமிலார்க்குப் புற உதவிகள் எத்தனையிருந்தும் பயனில்லை. தூயமனமுள்ளார்க்குப் புற உதவிகள் மிகையாகும். இதனால் தூயசிந்தை உடையவர்கள் கட்டுப்பாடற்ற வாழ்க்கை நடத்தலாம் என்று பொருள் சொல்லப்படலாகாது. தூயசிந்தையுடையவர் தங்களைப் பொறுத்தமட்டில் என்றும் ஒழுங்காகவே வாழவேண்டும். அவர்கள் வாழ்க்கையில் செய்யும் ஒவ்வோர் செயலும் அவர்களது அகத்தூய்மைக்கு தவறாச் சான்றாகும். 'மனிதனை ஆக்குவதும் அழிப்பதும் மனமே' எனக் கீதை அழுத்தமாகக் கூறும்.

---

முற்பக்கத்தொடர்ச்சி

எப்படி நதிகள் தங்கள் குணங்களை எல்லாம் சமுத்திரத்தில் கலந்ததும் இழக்கின்றனவோ அதுபோல் சாதகன் ஆதி சக்தியின் சன்னிதியில் அனைத்தையும் இழப்பான். ஆனந்தனாய் வாழ்ந்து ஆத்ம ஜோதியை அனைவர்க்கும் வழங்குவான்.

நதிகள் பலவாம் கடலினிலே
நாடிச் சென்று கலக்கும் வரை
கதிகள் பலவாய் சென்று நிறம்
குணங்கள் பல கொண்டிருப்பது போல்

துதிகள் செய்யும் சாதகரில்
சூதும் வாதும் போர் செய்து
பதியை நாடிப் போன பின்
பற்றற் றிருப்பார் கண்டீரே

விதியிதை யறியா வீணர்தான்
வேறு வேறெண்ணங் கற்பித்து
சதிகள் செய்து தானழிந்து
தரணி நோவச் செய்கின்றார்.

"தன்னைத்தான் தூக்குவதும் தன்னைத்தான் தாழ்த்துவதும் எல்லாம் தன்மனமே" எனப் புலவர் மில்ரனும்(Milton) இக்கருத்தையே பிரதிபலித்திருக்கின்றார்,

## 9-ம் அத்தியாயம்

## ராமநாமதூஷணை

வினா! காசியிலுள்ள 'ராமநாம' கரையோரமும், ராமநாமம் அச்சடித்திருக்கும் உடைகளை அணிவதும் ராமநாம தூஷணை என்பதே என் கருத்து. இவ்வகை மூடக்கொள்கைகள் உள்ள இடத்தில் உங்கள் ராமநாமமே சகல நோய்க்கும் சஞ்சீவினி எனும் கூற்று, அறியாமையையும் போலி வேடதாரிகளையும் உற்சாகமூட்டுவதற்கு உதவுவதுபோலாகும். உள்ளக்கனிவுடன் கூறும் ராமநாமம் உயர்ந்த மருந்தாகும் என்பதில் சந்தேகமில்லை. ஆனல் இதற்கு நல்ல முறையான சமயக்கல்வி வேண்டற்பாலது.

விடை: நீங்கள் சொல்வது உண்மை. உலகம் போலியிலும் மூட நம்பிக்கையிலும் நிரம்பியிருத்தலால் சரியானதென இருக்கும் ஒன்றையும் நடைமுறையில் கொண்டுவர ஒருவர் பயப்படுகின்றார். ஆயின் பயத்துக்கு ஒருவர் இடங்கொடுத்துவிட்டால், உண்மையைக்கூட மறைக்கவேண்டிவரும். ஒருவர் தாம் சரியென நினைப்பதை எவ்விடத்திலும் பயமின்றிச் செய்யவேண்டியதே சிறந்த சட்டமாகும். பொய்யும் போலி வாழ்வும் உலகம் உள்ளளவும் இருக்கும். தாங்கள் சரியானவற்றைச் செய்தால் அவை குறைந்து வருமல்லால் ஒருபோதும் கூடிவரா.

பொய்யினுல் சூழப்பட்டிருக்கும்போது எம்மையறியாமலே அதனுள் சிக்கி அதுசரியென எம்மை யாமே ஏமாற்றி வருதல் மிக அபாயகரமானது. எங்கள் அறியாமையினுலோ அன்றேல் சோம்பலினுலோ எவ்விதபிழையும் விடாதிருக்க யத்தனம் செய்யவேண்டும். எப்பொழுதும் எவ்விடத்தும் மிக விழிப்பாக இருக்கவேண்டும். சத்திய சாதகன் வேறெவ்விதமாகவும் இருக்கமுடியாது. கவனக்குறைவும் விழிப்பின்மையுமுடைய ஒருவனுக்கு மேலான சஞ்சீவினி மாத்திரை போன்ற 'ராமநாமம்' கூட உபயோகமற்றதாயிருக்கும். அத்தோடு மூடக்கொள்கைகளை இன்னும் அதிகரிக்கவும் செய்யும்.

# ஆத்மசித்திக்கான சாதனங்கள்.

(ஸ்ரீ சுந்தரம்மாள் ராகவாச்சாரி)

## 3 உண்மையையே பேசுதல்.

பரிசுத்தம் ஆத்மசித்தியடைய எத்துணை அவசியமோ அத்துணை அவசியமானது உண்மையையே பேசுதல், அதாவது பொய்பேசாமை. உண்மைப்பொருளாகிய ஆத்மஜோதியை நாடுபவர் உண்மையையே கடைப்பிடித்தொழுகல் வேண்டுமல்லவா? நம்முடைய இருதய சுத்தம், வாக்குச்சுத்தம், தேகபரிசுத்தம் மூன்றும் உயர்நிலையில் இருந்தால்மட்டில் ஆத்மாவின் உண்மைநிலையை நாம் அறிதல் சாத்தியம்.

உலகிலுள்ள சாமான்னிய மனிதர்களில் பெரும்பாலருக்குத் தம்முடைய குற்றம் குறைவுபாடுகளும், சில சமயங்களில் அறிந்தும், அறியாமலும் செய்யும் பொய்ச்சாற்றுகளும், மனதில் படுவதில்லை. எடுத்து யாராவது காட்டினாலும் எளிதில் நம்புவதில்லை. அவர்கள் எண்ணமும் தவறு, நினைப்பதும் பிசகு, நடப்பதும் கோணல் வழி, பேசுவதும் பொய்; இருந்தாலும் அவர்கள் பிசகான வழி நடப்பதாக மட்டும் அறிவதுமில்லை, அறிந்து சரிவழி நாட எத்தனிப்பதுமில்லை. தாம் குற்றங் குறைபாடுகள் எதுவுமில்லாதவராகவே சொல்லிக்கொள்வர். தனது குறைபாடுகளை பிறர் அறியாவண்ணம் பொய், பித்தலாட்டங்களைக் கையாடி தங் குறைகளை மறைக்க முயல்வர், தாம் அறியாது பிழை யிழைத்ததாகவாவது ஒத்துக்கொள்ள சம்மதிப்பதில்லை. பிறர்மீது அபாண்டமானவும், பொய்யானவும் ஒரு அபவாதத்தைச் சுமத்தி அது பிசகு என்று பலர் எடுத்துக்காட்டியபோதுங்கூட ஒத்துக்கொள்ளாது, தான் முதற்கூறிய வசைச்சொற்களையே சரியானவைஎன சாதிக்க முயல்வர். உண்மையில் தாம் சொன்னது பிசகு என்று அறிந்துங்கூட தான் பிடித்த முயலுக்கு மூன்றேகால் என்று சாதிக்க முயல்வது பலமனிதர்களது சுபாவம். எந்தப் பிரச்சினைக்கும் இருகட்சிவாதம் இருத்தல் சாத்தியம் என்பதே அவர்கள் மனதில் படுவதில்லை. பிறர் எடுத்துக்காட்டினும், நம்புவதில்லை. "சத்தியமே சக்தி, தத்துவமே சித்தி" என்ற மூதுரை முட்டாள்

களுக்காக ஏற்பட்டது என்பர். தாம் மற்ற மனிதர்கள் எல்லோரையும்விட புத்தி, நடத்தை, சத்தியம் எல்லாவற்றிலும் உயர்ந்தவரெனப் பிறர் எண்ணும்படி நடந்துகொள்ள முயல்வதை அறிந்தவர்கள் பார்த்து நகைப்பர்.

இம்மாதிரி பிறரை ஏமாற்றிப் பிழைக்கமுயல்வதினால் தங்கள் கண்களை இறுக மூடிக்கொண்டு தம்மையே ஏமாற்றிக்கொள்ளுகிறார்கள். தமது அறிவு, உணர்ச்சி, புலப்பாடு இவைகளை மழுங்கடித்துக்கொள்வதுடன் இயற்கை உணர்வையும் மந்தமாக்கிச் சுவாரணையிழக்கின்றனர். தமது ஆத்மசக்தி, ஆத்மசித்தி, பேரின்பநாட்டம் இவைகளுக்கு முக்கியமான நேர்மை, உண்மை, வாய்மை முதலிய மேலான குணங்களை இருந்த இடம் தெரியாது மூடியிட்டு மறையச் செய்கின்றனர். வாழ்க்கையில் இத்தகைய பொய், பிரட்டுப்பித்தலாட்டம் அடங்கிய முறைகளைக் கையாள்வதினால் ஏற்படும் மானபங்கமே, தமது போலித்தனமான, ஸ்யிலையும், நடவடிக்கையையும் எடுத்துக்காட்டி நல்வழிப்படுத்தக்கூடிய ஏதுவாகும். தமது இழிவான வசைக்கிடமான நடத்தையினால் ஆத்மஞானமடைந்து முன்னேற்றமடைவதில், காலதாமதமாகிப் பிந்திப்போய்விட்டதை விரைவில் அறிந்தவுடன், தமக்கு ஏற்பட்ட துரதிர்ஷ்ட விபத்தை நினைந்து மனமிளகி வருந்துவர்.

பிறரை இகழ்ந்து நிந்திப்பது பெருங்குற்றமெனச் சொன்னோம். அதனால் ஏற்படும் தீங்குகளையும், பாக்கியக்குறைவையும் அறிந்தோம். இதைவிட வெகுகொடியதோர் கள்ளம், ஏய்ப்புமிக்க பொய்க்கூற்றுள்ளது. முகஸமன் வழங்கி இச்சகம்பாடுவது, பொய்சொல்வதிலும், நிந்திப்பதினும் கொடியபாவம். ஒருவரை முகஸ்துதிசெய்து, இந்திரன், சந்திரன், தர்மதுரை, என்றெல்லாம் இச்சகச்சொற்களைக்கொண்டு புகழ்ந்து அவரது சிநேகத்தையோ பொருளையோ கவர எண்ணி ஏற்பாடுகள் செய்தல் எத்தகைய கொடிய செயல்கள்? வெகுசாமானியமனிதரை, மிக்க உயரிய குணங்களமைந்தவராக முகமன் கூறுவது அன்னவரது செருக்கு அகங்காரத்தை அதிகப்படுத்தி அவரால் செய்யக்கூடாத காரியங்களையும் செய்யக்கூடுமென்று நினைத்துச் செய்ய முயன்று தோல்வியடையச் செய்யவல்லது. நமது நண்பர்களது குறைபாடுகளை மிகைப்படுத்தியோ, குறைத்தோ சொல்லாது உள்ளபடி எடுத்து

அவரிடம் சொல்வதே உண்மையான சிநேகத்திற்கு அழகு. நமது உண்மை நிலையும் மேம்பாடடையும். நேர்மைநிரம்பிய வாழ்க்கையை நாடிநடப்பவர் தமது ஒவ்வொரு எண்ணத்திலும் நடத்தையிலும் சத்தியம் ததும்பி நிற்கும்படி நடக்கவேண்டும்.

குழந்தைப்பருவத்தில் நாம் அறநெறி வாய்மை முதலிய குணங்களின் இயற்கையை அறியாமல் அவைகளையே நடைப்பிடித்து ஒழுகியமாதிரியே, கபடமின்றி சத்திய வாக்கையே பேசி, உண்மை நிலையிலேயே நடந்துவந்தால், ஆத்மசித்தியை அடைவதில் எவ்வித தடையும் ஏற்படாது. மனதில் ஒன்று, வாக்கில் மற்றொன்று, நடத்தையில் வேறொன்று என்றில்லாது, நிஷ்களங்கமான, நேரான வாழ்க்கை முறைகளைக் கைப்பிடித்து எல்லாரிடமும் உண்மை மொழிகளையே, பயம் பிரீதி இரண்டிற்கும் இடந்தராமல் எப்பொழுதும் பேசி நடந்துவருபவர்கட்கு ஆத்மசித்தி நிச்சயமாய் எதிர்கொண்டழைத்துநிற்கும்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

---

## மகாத்மாவின் மணிமொழிகள்.

நான் புதிய உண்மைகளொன்றும் கூறவரவில்லை. எனக்குத் தெரிந்த உண்மையை உரைக்கவும் அதன்படி நடக்கவுமே நான் முயல்கிறேன். பழைய உண்மைகள் பலவற்றிற்கும் புதிய பொருள் கூறுவதாக நான் சொல்லக்கூடும்.

நாம் மனிதர் எவரையும் அஞ்சுவதை விடுத்து, கடவுளின் உண்மையை மட்டுந் தேடுவோமானால் நாம் அனைவருந் தேவதூதர்கள் ஆகக்கூடுமென்று நான் நம்புகிறேன்

பரிகாரம் அடைவதற்காகத் தான் துன்பம் அனுபவிப்பதை சத்தியாக்ரகி விரும்புவானே யன்றி பிறர்க்குக் கஷ்டம் தருவதை விரும்பான்.

# தர்மத்தின் சிறப்பும் சக்தியும்.

[தென்னாபிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்]

முன்காலத்திலெல்லாம் உயிர்த்தியாகம் செய்தாவது தருமம் குலையாமல் வாழ்க்கையை நடத்துவது புனிதமான கருமமென்று ஜனங்கள் நம்பிக்கை கொண்டிருந்தார்கள். ஆனால், இக்காலத்திலோ ஜனங்களில் பலர் தர்மம் என்பதை வேருடன் களைந்து எறியவேண்டுமென்றும், தர்மம் என்பது மக்களின்வாழ்க்கையை பலவீனப்படுத்தும் சூழ்ச்சி யென்றும் பிரசாரம் செய்யவும் முற்பட்டுவிட்டார்கள். அவ்விதமாகப் பிரசாரம் செய்பவர்கள் தர்மானுஷ்டானங்களின் உட்கருத்துகளை அறியவும், அதன் தத்துவங்களைத் தெரிந்துகொள்ளவும் கடுகளவுகூட பிரயாசை எடுத்துக் கொள்ளுவதில்லை. கண்மூடித்தனமாக சித்தாந்தம் செய்துகொண்டு தாங்கள் நினைப்பதே சரியென்று வாதம் செய்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்கள் தர்ம விரோதிகளாகப் பிரசாரம் செய்து அலைந்து திரிகின்றனர்.

"கடவுள், தர்மம் இவை இரண்டும் மானிடவர்க்கத்தின் விரோதிகள். மானிட வர்க்கத்தையும், உலகத்தையும் இப்போதுள்ள பரிதாப நிலைமைக்குக் கொண்டுவந்தது கடவுளும், தர்மமுமேயாகும். உலகத்தில் எந்த தேசத்தில் பார்த்தாலும், ஏழைமக்களும், ஒடுக்கப்பட்ட மக்களும் கடவுள் பெயராலும், தர்மத்தின் பெயராலுமே கொடுமைக்குட்படுத்தப்படுகின்றனர்," என்றெல்லாம் பறையடித்துப் பிரசாரம் செய்து நர்த்தனம் செய்கின்றனர்.

ஆனால் உண்மை என்ன? உலகத்தில் சுயநலம் வாய்ந்தவர்களும், பேராசை பிடித்தவர்களும், செல்வ வெறிகொண்டவர்களும், துன்மார்க்கர்களும், கடவுள் பெயரையும் தர்மத்தின் பெயரையும் கூசாமல் உபயோகித்து தங்களுடைய நீசத்தனமான இச்சைகளை சாதித்துக்கொள்ளுகிறார்களென்பது நிதர்சனம். இம்மாதிரி நீசர்கள் பொன்னும், பெண்ணும், பதவியும், பட்டமும் பெற கடவுள் பக்தர்களாகவும் தர்ம சீலர்களாகவும் வேஷம் போட்டு காரியத்தை சாதித்துக் கொள்ளுவது உண்மை.

செய்கைக்கு கடவுளை
ஆனால் இம்மாதிரி துன்மார்க்கர்களின்
யும், தர்மத்தையும் உத்தரவாதமாக்குவது முறையல்ல. மதஅனு
ஷ்டானத்தினாலும், பகவத் பக்தியினாலும் இந்தத் துன்மார்க்க
முறை மக்களுக்குப் படிகிறதென்று எப்படிச்சொல்லமுடியும்?
கடவுளிடம்பக்தியும், தர்மசிந்தனையும் இல்லாததனாலேதான் துன்
மார்க்க வழக்கங்கள் நடக்கின்றனவென்று நான் கூறுவேன்.

ஜனங்களுடைய மனதிலே கடவுள் எங்கும்நிறைந்தபரிபூரண
சக்தி என்னும்நம்பிக்கையும், மதத்தில் பக்தியும் இருக்குமாயின்
உலகத்தில் கொடுங்கோன்மை ஒழியும். அநியாயம், அக்கிரமம்,
அதர்மம், ஏழைகளைச்சுரண்டுதல் ஆகிய தீயகுணங்கள் மாய்ந்து
மடிந்துபோகும்.

உலகத்தில் மக்களுக்கு மதபோதனை செய்யாமலும், கடவுள்
பக்தி ஞானம் புகட்டாமலும் தான்தோன்றித்தனமாக விட்டுவிட்-
டால், மக்களிடையே கட்டுப்பாடும் ஒழுங்கும் சிதைந்துவிடும்.
தீயோர்களின் கூட்டம் சிதைந்துவிடும். பலம் வாய்ந்தவர்களும்,
செல்வாக்குள்ளவர்களும், எளியவர்களையும், பலஹீனர்களையும்
அடிமைப்படுத்தித் தொந்தரவு செய்வார்கள். காடுகளில் பலம்
வாய்ந்தமிருகங்கள் பலஹீனமான மிருகங்களைக் கொன்றுதின்னு
வதுபோல மானிடவர்க்கமும் ஆகிவிடும்.

மானிட சமூகத்தில் மதபக்தியும், தெய்வபக்தியும் இல்லாமல்
போய்விடுமாயின், இன்றுமிருகங்களையும் பறவைகளையும் கொன்
றுதின்னும்மனிதர்கள், மானிடபக்ஷணம்செய்யவும் துணிந்துவிடு
வார்கள். புராணத்தில் சொல்லப்படும் இராட்சஜர்களைப்போல
ஆவார்கள்

ஏழைகளை அக்கிரமம் செய்பவனும், ஜனங்களை இம்சிப்பவ
னும், திக்கற்ற பலஈனமக்களை வதைப்பவனும் தான்செயயும் பாவ
த்தினாலேயே அழிந்துபோவான். பாபத்தைச்செய்தால் அதன்
பலனை அனுபவிக்காமல் தப்பித்துக்கொள்ள முடியாது. ஆகவே
பாபியை அவன் செய்த பாபமே கொல்லும்.

தர்மம் அவ்வளவு சக்திவாய்ந்தது. தர்ம அனுஷ்டானம் ஒன்
றேதான், மானிட சமுதாயத்தை சீர்திருத்தவல்லது. மேல்நாட்டு
நாகரிகத்தின் பகட்டிலேமோகமேற்பட்டு சித்தம் கலங்கியிருக்கும்
நம் நாட்டுச் சகோதரர்களை அன்பினாலும். அனுஷ்டானத்தினாலும்
தர்மமார்க்கத்தைக் கடைப்பிடிக்கச்செய்வது நம்கடனாகும்.

———————

# பாடல் நெறி.

கா. பொ. இரத்தினம் அவர்கள்,

மக்களின்வாழ்க்கைமுறைகளும் சூழலும் மாறிக்கொண்டே போகின்றன. இவற்றிற்கேற்ப நமது வழிபாட்டுமுறைகளும் மாறு விடில் அவைதாமாகவே சிதைந்துவிடும். சமயம் வாழ்வைப்பூரண ப்படுத்த வேண்டுமேயன்றி அதனைவிட்டுப்பிரிந்துநிற்றல்கூடாது: இரண்டையும் பிரிக்க முயல்பவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றுபவ ர்களாவார். தமது வாழ்க்கைமுறைகளை நாளுக்குநாள் மாற்றிக் கொண்டு வழிபாட்டு முறைகளை மாற்றக்கூடாதுஎன்று கூறுகின் றவர்கள் போலிச்சைவர்களேயாவர். "முத்திதரும் தெய்வசபை யைக்காண்பதற்குச் சேரவாரும் செகத்தீரே" என்று யாவரையும் அழைக்கும் நமது சமயம், "எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று எவ்வுயிர்க்கும் அன்பாயிரு" என்று யாவரிடத்தும் அன்புகொள்ளுமாறு ஏவும் நமது சமயம் எவ்வளவு பரந்தது! எவ்வளவு முற்போக்குடையது! பாருங்கள்!!! நமது சமயத் தைவிட முன்னைப்பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப்புதுமைக் கும் புதுமையாய் நிற்கும் தகைமை வாய்ந்தசமயம்வேறுண்டோ? ஆகவே நமது சமயத்தின் அடிப்படையான கொள்கைகளுக்கு மாறுபாடில்லாமல் நமது வழிபாட்டுமுறைகளைச் செம்மைப்படுத் துவதுதான் நமதுகடன். இதுதான்இயற்கையோடிசைந்தவாழ்வு; தெய்வநியதி.

அன்பேசிவம்; அன்பர் பணியே இறைபணி; என்பவற்றை நமது சமயவழிபாடுகள் நன்கு புலப்படுத்தவேண்டும். "அன்பர் பணிசெய்ய என்னை ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்" என்பதே சிவயோகிகள் நமக்கு வழங்கிய மூலபண் டாரம். படமாடுங்கோயில்வழிபாடு நடமாடுங்கோயில்களாகியமனி தர் குலத்துக்குப் பணி செய்தலோடிசையவேண்டும். இனிநாம் போற்றவேண்டிய மகா மந்திரம் அப்பர் எனும் சிவஞானச் செல்வர் அருளிச்செய்த "என்கடன் பணி செய்து கிடப் பதே" என்பதாகும். இதுவே சமயப்பற்றில்லாதவர்களை யும் இழுத்து இழுத்து அன்பராக்கத்தக்க இனியமந்திரம்.

அன்பர்பணி செய்தற்குச் சித்தஞ் சிவமாதல் வேண்டும். இத ற்கு இக்காலத்திலே மிகப் பொருத்தமான வழிபாட்டு முறை தேவாரதிருவாசகங்கள் புலப்படுத்தும் பாடல் நெறியேயாகும்.

சைவ சமயாசாரியர்கள் யாவரும் திருக்கோயில்கள் தோறும் சென்று பக்கவாத்தியங்களோடு தமிழ் மாலைகளைப்பாடிப் பேரின்பம் பெற்றார்கள், ஆனாயநாயனார் புல்லாங்குழல் வாசித்ததனாலே முத்தியடைந்தார். திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தருடைய தேவாரங்களை யாழிலேபாடிச்சிவகதிபெற்றதை யாவரும் அறிவர். இசையின் பெருமையையும் தாய்மொழியின் சிறப்பையும் உணர்ந்து இரண்டையும் ஒன்றாகப்பிணைத்துப் போற்றிய தமிழ்மக்கள் கண்டசிறந்த நெறியே இப்பாடல் நெறி. இதன் பெருமையையும் இக்காலத்துக்குஏற்றதகைமையையும்உணர்ந்தே உத்தமர்காந்தியடிகளும் இதனைப் போற்றிப்பரப்பினர்.

சிவபெருமான் தமிழிசை கேட்பதில் மிக்கவிருப்பமுடையவர் என்பதையும் தமிழர்கள்தமிழ்ப்பாடல்களையேபாடி அர்ச்சிக்க வேண்டுமென்பதையும் பெரியபுராணமும் தேவார திருவாசகங்களும் கூறுகின்றன. "இருந்து நீர் தமிழோடிசைகேட்கும் இச்சையால் காசுநித்தல் நல்கினீர்" என்று சுந்தரர் சிவபெருமானைப் பழித்தார். "காதாரமுதம் பெறவல்லோர் காசிகை பாற்றாதாய்ச் சென்றார்" என்று ஒருபுலவர் பாடினார். கடவுள் "பண்ணாரின்பர மாயபரஞ்சுடர்" என்று சுந்தரர் கூறியதன் உண்மையை உணர்ந்து பாருங்கள்.

தமிழிலே கடவுளை வைதாலும், பொய்யாகப் புகழ்ந்தாலுங் கூட அவருடைய அருள் கிடைக்குமென்று சிவஞானச்செல்வர்கள் கூறியுளர். எனின் நமது செந்தமிழ் மொழியின் கடவுட்டன்மையையும், இனிமையையும், பாடல்நெறியின் பெருமையையும் பற்றிப் பரக்கப்பரக்க உரைக்கவேண்டுமா! இதனாலன்றோ "உளக்குமறைநாலினும்" உயர்ந்ததமிழ் என்று கம்பரும், "யாமறிந்தமொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்குங்காணோம்," என்று பாரதியாரும் பாடினார்கள். உலகத்திலே சிறந்த பாட்டுக்கள் கிரேக்க மொழியிலேதான் உள்ளன. இந்தப்பாடல்களிலும் சிறந்தன தமிழ்ப்பாடல்களே" என மேனாட்டறிஞர் வின்ஸ்லோவும், பாட்டுக்களிலே சிறந்தது தமிழ்ப்பாடலே" எனவடநாட்டுக்கவிஞர் தாகூரும் கூறினார்கள். "முத்தமிழால் வைதாரையு மங்குவாழவைக்கும்" முருகன் என்றுதிருப்புகழைப்பாடிய அருணகிரியார் திருவாய் மலர்ந்தார். "பொய்யே உன்னைப்புகழ்வார் புகழ்ந்தால் அதுவும் பொருளாகக்

கொள்வானே," என்று பாடினார் சுந்தரர். "எங்களுடைய குரல் கூடாது, நல்லமுறையிலே பாடவுந் தெரியாது" என்று சிலசைவர்கள் எண்ணிக் கோயில்களிலே கூடப் பக்திப்பாடல்களைப் பாடுவதில்லை., இவர்கள் "கோழை மிடறுகக் கவிகோளும் இலவாக இசைகூடும்வகையால் ஏழையடியாரவர்கள் யாவைசொனசொன் மகிழும் ஈசன்" எனும் சம்பந்தர் திருவாக்கை உணர்ந்து இனியாகுதல் பாடி வணங்குவார்களாக. உள்ளத்திலே பெருகும் அன்பிலிருந்துபிறக்கும் சொன்மலர்களின் பெருமையைச் சம்பந்தரன்றி வேறுயார் அறியவல்லார்? பிறமொழிகளுக்கு அடிமையாகிய நம் உரிமையையும் பெருமையையும் இழந்தநாம் ஏழையடியாரவர்கள் யாவை சொன சொன் மகிழும் ஈசன்" நமது கடவுள் என்பதை இனியாகுதல் நிலைநாட்டவேண்டும். உள்ளத்தை ஒடுக்கி, உத்தமனை நினைந்து, நெக்கு நெக்குருகி அறிந்தவற்றை எல்லாங்கூறிப்பாடுங்கள். "அறிந்தஅளவிற் புகழ்ந்து ஏத்துங்கள்" என்றார் நக்கீரரும். "பாடுவார் பாடலுகப்பாய் போற்றி," என்று அப்பர் கூறியதை மறவாதீர். பாடும் ஆற்றல் வாய்ந்தவர்கள் யாவருங்கடவுளையே பாடவேண்டும். பொய்மையாளரைப் பாடக்கூடாதென்றும் சுந்தரர் பாடியுளர். உள்ளத்திலிருந்து பிறக்கும்பாடல்களையும் நமது சிவஞானச்செல்வர்கள் பாடித்தந்த அருட்பாடல்களையும், பாடிப்பரவுவதுதான் பாடல்நெறியாகும்.

"மதிதருவான் நெஞ்சமே யுஞ்சுபோக வழியாவது
இது கண்டாய் வானோர்க்கெல்லாம்
அதிபதியே ஆரமுதே ஆதியென்றும் அம்மானே
ஆரூர் எம்மையாவென்றும்
துதி செய்து துன்று மலர் கொண்டு தூவிச்சூழும்
வலஞ்செய்து தொண்டு பாடிக்
கதிர் மதிசேர் சென்னியனே காலகாலா கற்பகமே
என்றென்று கதறு நில்லே"

எனும் அப்பர் தேவாரம் இதனை விரித்து விளக்குகிறது. இந்த நெறியே இனி எங்கும் பரவவேண்டும். அருட்பாடல்களைத் தனித்தும்சேர்ந்தும் பாடலாம். இக்காலத்திலே அன்பர்கள் சிலர் கூட்டுப்பிரார்த்தனை நடத்துகிறார்கள். இதுமிகச்சிறந்ததொண்டாகும்.

சமயாசாரியர்கள் நால்வரும் அருட்புலமை மிக்கதமிழ் நாவலர்களாக விளங்கினார்கள். சித்தஞ்சிவமாகிய பின் செந்தமிழ்மாலைகளைப்பாடி நமக்குஅளித்துளர். சிவபெருமானே அவர்களைப்

பாடுவித்தாரென்று அவர்களேகூறியுள்ளர். பண்ணுட்பாமாலைபாடப்பயில்வித்தானை," "நாயேனைத்தன்னடிகள்பாடுவித்தநாயகனை" எனுங்கூற்றுக்களைக்காண்க. இவர்களுடையதேவாரதிருவாசகங்களைவிடச்சிறந்த அருட்பாடல்கள் வேறெம் மொழியிலுமில்லை. மொழிக்குமொழி தித்திக்கும் இவற்றை இறைவன் விரும்பி ஏற்பாரென்பதை "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடியநற்றமிழ்மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" எனும் சுந்தரமூர்த்தி நாயனர் திருவாக்குப் புலப்படுத்துகிறது. "தமிழ்மாலைசெம்மாந்து இருந்துவாய் திறப்பார் சிவலோகத்தாரே" என்றும் "திருஞானசம்பந்தன் சொன்மாலை தஞ்சமெனநின்றிசைமொழிந்த அடியார்கள் தடுமாற்றம் வஞ்சம் இலார்" எனவும் நாயன்மாரே இவற்றின் பெருமையைக்கூறினர். "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர்சிவபுரத்திலுள்ளார் சிவனடிக்கீழ்ப் பல்லோரும் ஏத்தப்பணிந்து" என்று மணிவாசகர் திருவாய்மலர்ந்துளார். ஆகவே, இவற்றின் பொருளை உணர்ந்து நாம் இசையுடன் பாடிக்கடவுளைத்தொழவேண்டும். பொருளறிந்து உணர்ச்சியுடன் இவற்றை ஓதினல் இவை நம்மைச்சிவநெறியிற்புகுத்தி, அன்பர் பணியில்ஈடுபடச்செய்து, பேரின்பம் பெறச்செய்யும். "தாவாரம்" ஏற்படுதற்கும் "தனக்கு ஒரு வீடு" உண்டாவதற்கும் தேவாரங்கள் இன்றியமையாதன என்பதையும் அவற்றைப் படிப்பதால் இவை உண்டாகவேண்டும் என்பதையுமே

"தாவாரம் இல்லைத் தனக்கொரு வீடில்லைத்
தேவாரம் ஏதுக்கடி—குதம்பாய்
தேவாரம் ஏதுக்கடி"

எனும் சித்தர்பாடலும்புலப்படுத்துகிறது.

பாடல்நெறியின் பயனையும் நாயன்மார் நன்கு எடுத்துவிளக்கியுள்ளர். "வாயாரத் தன்னடியே பாடுந்தொண்டர் இனத்தகத்தான்;" "பரவி நாடொறும் பரவுவார் வினை பற்றறுக்குமே;" "பண்ணொன்ற இசைபாடும் அடியார்கள் குடியாக மண்ணின்றி விண்கொடுக்கும் மணிகண்டன்;" "பாட்டும்பாடிப் பரவித்திரிவார் ஈட்டும் வினைகள் தீர்ப்பார்" முதலியன காண்க. வழிபாட்டு முறைகளுள் இப்பாடல்நெறியே சிறந்ததென்பதை நாவுக்கரசர் மிகத்தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளர். "அளப்பிலை கீதஞ்சொன்னார்க்கு அடிகள்தாம்அருளுமாறே" என்பது அவர்தம் திருவாக்கு. "அம்பலக்கூத்தனைப் பாடலாளர்க்கல்லாற பயனில்லையே" என்பதுஅவர் கண்ட முடிபு.

———

# அவதார புருஷர்கள்.

(விவேகானந்தர்.)

"கடவுளின் மகிமை பேசப்படுமிடம் பரிசுத்தமடைகின்றது" என்று சொல்லப்படுகிறது. அப்படியானால்கடவுளின் மகிமையைப் பற்றிப்பேசுகிறவன்எவ்வளவுபரிசுத்தமடைவான் பாருங்கள். ஆதலால், உண்மையான ஆத்மஜோதியைப் பிறருக்கு அளிக்கக்கூடிய மகிமையுள்ளவனிடம் எவ்வளவு மரியாதையுடன் நாம் நெருங்க வேண்டுமென்றுயோசித்துப்பாருங்கள். ஆத்மவஸ்துவைப்போதிக்கத்தக்க ஆசாரியர்கள் மிகச்சொற்பமாக உலகில் இருந்தபோதிலும் ஒருபோதும் இவ்விதமகான்கள் இல்லாமற் போவதில்லை. இவ்விதமகாபுருஷர் ஒருவரும் இல்லாமற் போகும்காலம் வந்த உடன்—எப்போதாவது வந்தால்—உலகம் மிகக்கொடியநரகமாக மாறி அழிந்துபோகும் வழியில் செல்ல ஆரம்பிக்கும். அவ்வித ஆசாரியபுருஷர்கள் மனிதவர்க்கத்தில் மிகச்சிறந்தவர்களே. "யாதொரு இச்சையுமில்லாத கருணாசாகரம்" என்று பகவத்கீதையில் கூறுவதைக்கேளுங்கள். 'நான் எல்லோருக்கும் ஆசாரியன் என்றறியுங்கள்'. பரவஸ்துவாகிய ஈசுவரனது அவதாரங்கள்—ஸ்ரீகிருஷ்ணபகவானைப்போன்ற அவதாரபுருஷர்கள்—சாதாரண ஆசாரியர்களெல்லோரையும்விட மிகமேலானநிலையிலும் கண்ணியமான பதவியிலும் வசிப்பவர்களாவார்கள். இவர்கள் தம்பரிச மாத்திரத்தால்—சிற்சிலர்தம் இச்சாமாத்திரத்தால்கூட—ஆத்மவித்தையைப்புகட்டிவிடச்சக்தி பொருந்தியவர்கள். மிகமிகக்கடைப்படியில், மிக இழிந்த நிலையில் உள்ளவனும் இவர்களுடைய கட்டளையால் ஒருவிநாடிப்பொழுதில் முனிவனாகமாறிவிடுகிறான். மனிதசொரூபத்தின் மூலமாகக் கடவுளின் உன்னத ஆவிர்ப்பவமென்று அவர்களைச் சொல்லிவிடவேண்டும். அவர்கள்மூலமாகஅன்றி வேறுவிதமாகநாம் கடவுளைக்காணமுடியாது. மனிதன் அவர்களை வணங்கியே தீரவேண்டியவனாகிறான்; இவர்களை மாத்திரமேமனிதன் வணங்கித்தீரவேண்டும்.

கடவுள் இவ்வாறு மானிட உருவங்கொண்டு ஆவிர்ப்பவிக்கும்போதுமாத்திரமே மனிதன் கடவுளைக்காணமுடியும். வேறு

எவ்விதமாகவும் தென்படுவதில்லை. ஏன் என்டீர்களோ? கேளுங்கள்! வேறுவிதமாகப்பார்க்கமுயல்வோமானல் நாம் எவ்விதஉருவத்தைமனதில் நினைப்பது? நாம் நினைக்கக்கூடிய உருவமெல்லாம் கடவுளின் மிகக்கொடிய சொரூபமாகவே முடியும். அவற்றையே கடவுள் என்றுவணங்குவோம். ஒரு அஞ்ஞானியைச் சிவபிரான் விக்கிரகம் செய்யுமாறு ஒருகாலத்தில் கட்டளையிட்டார்களாம். பலநாட்கள் மிகுந்த கஷ்டப்பட்டபின் அவர் ஒருகுரங்கின் விக்கிரகம்செய்து முடித்தாராம். இப்படி ஒருகதையுண்டு (பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்காகமுடிந்தது) இதன் கருத்தென்ன? கடவுளின் உண்மையானசொரூபத்தை—பரிபூரணபிரம்மசொரூபத்தை —உள்ளபடி அறியநாம் செய்யும்முயற்சியெல்லாம் மிகவும் துக்ககரமாக முடிவடைகின்றன. தன் ஜீவசொரூபத்தினின்றுமுற்றிலும்வேறுபட்டதாகக் கடவுளைக்காண்பது மானிடஇயற்கையில்லை. நம்மானிட இயற்கைக்குமேலே எழும்பக்கூடியகாலமும் எப்பொழுதாவதுவரலாம். அப்பொழுது கடவுளின் உண்மைச்சொரூபம் நமக்குவிளங்கும். ஆனால், தற்காலம் இருக்கும் வண்ணம் பந்தநிலையில் நாமிருக்கும்வரையில், கடவுள் மனிதன் மூலமாக மானிடஉருவத்தில்தான் நாம் பார்க்கவேண்டும். எவ்வளவுவேண்டுமானாலும் பேசிவிடலாம்; எவ்வளவு வேண்டுமானாலும் முயற்சிசெய்து பாருங்கள்; மானிடசொரூபத்திலல்லாமல் வேறு சொரூபத்தில் நீங்கள் கடவுளை நினைக்கவும் முடியாது. புத்திசாதுரியமானஉபந்நியாசங்கள் கடவுளைப்பற்றி நீங்கள் பேசலாம்; பகுத்தறிவே சகலமும் என வாதாடுகிறவர்களாக நீங்கள் இருக்கலாம். கடவுளின் அவதாரங்களைப்பற்றிய சரித்திரங்களும் கதைகளும் அபத்தமென்று ருஜுப்படுத்தி நீங்கள் திருப்தியடையலாம். ஆனால், சாமான்ய அறிவைக்கொண்டு அனுபவமெப்படியிருக்கிறதென்று கவனித்தால் உண்மை விளங்கிவிடும். இந்தக் கட்சிகளில் எவ்விதசாரமுங்காண்பது அரிதாகிவிடும். கடவுளின் அவதாரங்களை வணங்குவதைக்கண்டித்துஎவரேனும் உபந்நியாசஞ்செய்வதை நீங்கள் இனிக்கேட்கநேர்ந்தால், அவரைக்கெட்டியாகப்பிடித்துக்கொள்ளுங்கள். கடவுளைப்பற்றி அவருடைய கொள்கையென்னவென்று கேட்டுவிடுங்கள். எங்குப் வியாபி, சர்வசக்திமான் என்னும் பலசொற்களுக்குஅவர்கூறும்பொருள்களைக் கேட்டுவிடுங்கள். அந்தச்சொற்களை எழுத்துக்கூட்டமுடியுமேய

ன்றி வேறென்றும் அவர்களுக்குத்தெரியாது. அச்சொற்களைப் பற்றி அவர்கள் எவ்விதகருத்துங்கொண்டவர்களல்ல. ஏதேனும் பொருள்கள் கூறவந்தாலும் அதில் அவர்களது சொந்தமனோபாவனையே நிறைந்துவிளங்கும் ஒரு புத்தகம் படிக்காமல் இருக்கும் சாமானியமனிதனைவிட இவர்கள் இவ்விஷயத்தில் உயர்ந்தவர்களல்லவென்பது உங்களுக்கு எளிதில் தெரியவரும். சாமானியமனிதன் வாய்மூடி மௌனமாக இருந்துவிடுகிறான்; உலகத்தின் அமைதியை அவன் கெடுப்பதில்லை. மேலே சொல்லியபடி கட்சியாடுகிறவர்கள்தான் மனிதவர்க்கத்தில் கலக்கத்தையும் துக்கத்தையும் உண்டுபண்ணுகிறார்கள்.

# மணித்தாய்நாடும் மரதனோட்டமும்.

முதுதமிழ்ப்புலவர் மூ. நல்லதம்பி] (உரிமை; ஆக்கியோர்க்குரியது

தனக்கெனவா ழாதுபிறர் தமக்கெனவாழ் தனித்தகைமை
முனைக்கவெழி லரசுநிலை முனிந்துமனை மகத்துறந்தோன்
நினைக்கமுடி யாததவ நெறியாளன் அருளாளன்
சினக்கடுமை கடிந்தபுத்தன் திருவடியைத் தொழுநாடு.

முந்துபல நெறியானு முனைப்பகற்றி முனிவனருள்
சந்ததமும் பெறல் வாய்க்கும் தத்துவச்சீர்ச் சைவமெனும்
இந்துமதந் தன்பழமை யெம்மருங்கு மிகக்காட்டிச்
சிந்தனைக்கோ ரிருப்பிடமாய்ச் சிவம்பெருக்குஞ் சீர்நாடு.

எல்லாரு மொருகுலத்தார் யாவருக்கும் வேற்றுமையின்
றில்லையென அறம்பெருக்கி இறைதொழச்செய்யிசுலாமும்
நல்லபொறை யடிகளென நவை தீர்த்த கிறித்துவெனும்
சொல்லழக னமைத்துவைத்த துறைமதமுந் துதைநாடு.

# ... உண்மைத்துணுக்குகள். ...

(திருவருணை உமா எழுதியது.)

30. எவனொருவன் குருவினுடைய சிதானந்தகுணங்களை சதா காலமும் சிந்தித்துக்கொண்டிருப்பானோ அவன் தனதெதார்த்தமான அந்த உன்னதவடிவையே அடைகிறான். நாம் எதைப்பற்றி இடைவிடாது சிந்தித்துக்கொண்டிருக்கிறோமோ அவ்விடத்திற் சேர்ந்துஅம்மயமாவது விலக்கமுடியாததோரியற்கை விதியாகும்.

31. வீண்எண்ணங்களுக்கும் வீண்ஆசைகளுக்கும் சிறிதும் இடங்கொடாமல் ஒருமுகப்படுத்தப்பட்டமனம் மிகவும்உன்னதசக்தியை அடைகிறது. அம்மனமே தேடுதலும் நாடுதலுமற்ற தூன்யதார்த்தவுண்மையை அறிந்து அடங்கியமைதி யுறத்தக்கயோக்கியதையைடைகிறது.

32. ஒவ்வொரு சுயநல ஆசையையும் ஒவ்வொரு கெட்டபழக்கவழக்கத்தையும் தியானவலிமையால் ஒழித்தவன் அத்துயவாழ்க்கையின் பலனாக, விருப்புவெறுப்பு வருந்தல் வருத்தல் செல்வம் வறுமையாகிய யாவற்றிற்கும் மேம்பட்டதும்விதியையும் மதியா அமைதியுள்ளதுமான ஓர் பூரணஇனியவாழ்க்கையை வெகுசீக்கிரமே அடைவான்.

33. நானென்றகந்தையுள்ளவன் தன்வாழ்க்கை வழியிலுள்ள ஓயாத துன்பங்களையும் துக்கங்களையும் ஆசாபாசங்களையும்விட்டு, உள்ளார்ந்த அமைதியையும், மாசற்றுத்தூயதாய்விரிந்த அன்புவாழ்க்கையையும் ஒருநாளுங்காணமாட்டான்.

# கிரிதரலால் சரித்திரம்.

(பக்தி)

கண்ணன் தமது பக்தர்களுக்குப் பிரசன்னமாகநின்றுஅருள்புரியும் தலங்களில் விசேடித்தது பிருந்தாவனம். அங்கு "கிரிதரலால்" என்னும் பெயருள்ளஒருவர் முற்காலத்திலிருந்தார். அவர் கண்ணன்மீது இடையறாத பக்தியுடையவர். நாள்தோறும் சாதுபூஜை செய்வதில் மிகவும் விருப்பமுள்ளவர்.

காலில் சிறுசதங்கைகட்டி நின்று, கையில்தம்புராவைமீட்டி, ஆனந்தக்கூத்தோடு ஹரிபஜனை செய்வதுவழக்கம். ஒருநாள் இவர் கண்ணபிரானின் திருக்கோவிலில் பஜனை செய்யத்தொடங்கும்போது, அங்கிருந்தசாதுக்கள், கண்ணபிரான்கோபிகைகளுடன் ஆடியகூத்தைக் கீர்த்தனத்திலமைத்துப் பாடும்படி வேண்டினர். அவரும் அதற்கிசைந்தார்.

"அதற்குத்தகுந்தஆடைவீட்டிலிருக்கிறது. போய்எடுத்துவரலாமென்றால் நேரஞ்செல்லுமே" என்று கண்ணபிரானை அன்புடன்நினைந்தார். என்ன ஆச்சரியம் ஒருபீதாம்பரம் ஆகாயத்திலிருந்து இவர்கையில் விழுந்தது. இதைக்கண்ட சாதுக்களெல்லாம் இவரது பக்தியையும் கண்ணபிரானின் பெருங்கருணையையும் கொண்டாடினார்கள். பின்னர் கிரிதரலால் அப்பீதாம்பரத்தை அணிந்து சாதுக்கள் கேட்டகீர்த்தனத்தைப்பாடி ஆடினர்.

ஒருநாள் ஒருசாதுவைக் கிரிதரலால் தெருக்கோடியிற்சந்தித்தார். அவரை வீட்டுக்கு அழைத்துவந்து அவருக்குப்பாதபூஜை செய்து அவரது திருவருடியை விளக்கிய பாததீர்த்தம்கொண்டு மகிழ்ந்திருந்தார். இதைக்கண்ணுற்ற சுற்றத்தார், ஊரவர்கள் இவன் பிணம்பட்ட நீரையுண்டான், இவன் வேதியன் அல்லன் என்றுநிந்தித்துப்பேசினர்.

இதைக்கேட்ட கிரிதரர் அச்சாதுசாமாலியர் அல்லர்; இறப்பு பிறப்பு அற்றவர்; அவரைவீணாகஇகழ்ந்துபாபத்தைத்தேடிக்கொள்ளாதீர் என்றார். அதற்கவர்கள் நீர் பேசுவதால் பிரயோசனம் இல்லை. இதோ இந்தப்பிணத்தைப்பிழைப்பித்தால் உமது ஞானத்தைநம்புவோம். இல்லாவிடில் உம்மைச்சாதியிலிருந்து நீக்கிவிடுவோம் என்றனர்.

கிரிதரர் கண்ணபிரானைத் தியானித்துக்கொண்டே அவர்கள் கொண்டுவந்த பிரேதத்தைநோக்க, அப்பிணமாய் இருந்தவன்நித்திரையிலிருந்து எழுந்தவன் போல் எழுந்து தன் வழியேசென்றான். உடனே அங்குநின்றோரெல்லாம் கிரிதரரின் பாதத்தில் வீழ்ந்து வணங்கித்தமதுகண்ணீரால் அவரது பாதத்தைக் கழுவினார்கள். கிரிதரர் கண்ணபிரானைத்தியானித்தவண்ணமே நின்றார். அன்பர்கள் பக்கத்தே சூழ்ந்து நின்றனர். கிரிதரர் ஹரிபஜனை செய்யத்தொடங்கினார். அவரோடுசேர்ந்துயாவரும் ஹரிநாமத்தைப்புகழ்ந்துபோற்றிப் பஜனைசெய்தனர்.

கோபாலா கோபாலா, கோகுல நந்தன கோபாலா
ராதாரமண கோபாலா, ராஜிவநேத்திரா கோபாலா
யசோதபாலா எதுகுலதிலகா, ஏஜெகந்நாதா கோபாலா
நளினவிலோசன கோமளவசன நாராயணஹரி கோபாலா
(கோபாலா)

---

# மகாத்மாவின் மணிமொழிகள்.

ஆன்மசக்தியை உபயோகிப்பவர், மிருகபலத்தை உபயோகிப்பவர், இருவரும் போர்வீரர்களே. பின்னவர் ஆயுதம் இழந்தவழி அபஜெயமுற்றதாக ஒப்புக்கொள்வர்; முன்னவர் அபஜெயம் என்பதையே அறியார்.

சத்யாக்ரகத்தை அனுஷ்டிப்பதனால் சர்க்காருக்குக்கஷ்டமேற்படலாம். ஆனால் சத்யாக்ரகி அதற்காக சத்யாக்ரக அனுஷ்டானத்தை விட்டுவிடமாட்டான்.

# அறிவும்—அறியாமையும்

(க. திருநாவுக்கரசு)

அறிவும் அறியாமையும் மனிதனது உள்ளத்தையாளுகின்றன. அறிவுமேல்நோக்கிச் செல்லப்பார்க்கின்றது. அறிவீனம் கீழ்நோக்க நிலையில் ஸ்திரமாய் இருந்துவிடப்பார்க்கிறது. இவ்வறிவு அறிவீனம் இரண்டோடும் உறவு வைத்துக்கொண்டிருக்கும் மனமானது இவ்விரண்டிற்குமிடைப்பட்டு அவதியுறுகின்றது. இச்சைவயப்பட்டமனத்தின் அவதியை அறிவு உணர்ந்து கொள்ளுகிறது. அறிவீனம் அதனை உணர்வதில்லை. ஆசைகளிலிருந்தும் மனதை விடுவித்துக்கொள்ள அறிவு முயலுகின்றது. ஆனால் அறிவின் முயற்சிஇலகுவில் பயன்பெறமுடிவதில்லை. ஏனெனில் அறிவின் சக்தி அறியாமையின் சக்தியிலும்குறைந்திருக்கும்பேர்துஅறியாமையால் அறிவு அடிக்கடி மறைக்கப்படுகின்றது. அங்ஙனம்மறைக்கப்படும்பொழுது மனமும் அறியாமையில் மூழ்கிவிடுகிறது. நல்லுணர்ச்சியிருந்த நேரங்களில்தான் கண்டநல்லனுபவங்களையும் மறந்துவிடுகின்றது.

மனிதனதுஅறிவுவளர்ச்சியில் அடிக்கடி இவ்விதமாற்றநிலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும்; நன்மையை நல்லநிலையை அடையவிரும்பும் ஆன்மாவுக்கு இந்நிலை வருத்தத்தைக்கொடுப்பதாக இருக்கும். மனிதனது கேவல நிலைக்கும் அறியாமைக்கும் அவன் கடவுளன்பை மறந்துபோவதற்கும் ஆசையே காரணமாகும். ஆசையற்ற இடம் ஆனந்தமென்பதை நல்லுணர்ச்சி உண்டாகும் சிலநேரங்களிலாகுதல் அவ்வான்மா உணராமலிருக்க முடியாது. ஆதலால் "பற்றுவன அற்றிடு நிராசையென்றொருபூமி"யைப்பற்றிப்பற்றிப்பிடிக்க அவ்வான்மாமுயலவேண்டும். அம்முயற்சிதான் ஒருஆன்மாவுக்குச் சிறந்த பலனையளிக்கும். மனமானது ஆசைகளிற்சிக்கி அவைகளிற்பற்றுவைத்துக்கொண்டு கடவுளே கடவுளே என்று வாளாமுணுமுணுத்துகொண்டு திரிவதில் யாதொருபயனுங்கிடையாது.

நிராசையுள்ளத்திலேதான் அருளொளி உதயஞ்செய்யும்.

# — மனிதனும் —மதமும். —

(ரீ. மனோஹரன்)

உயிர்வாழ்வனதோன்றும்வகைகள் நான்குஎன்றும் தோற்றியவை எழுவகைப் பிறவிபேதம் உடையன என்றும் அறிஞர் கூறிப்போயினர். எழுவகைப்பிறவிகளிலும் மனிதப்பிறவி மேன்மையுடையதுமல்லாமல், மிகவும் முக்கியமுமானது. தேவர்கள் மனிதனிலும் மேம்பட்டவர்கள். என்றாலும்அவர்களும்அப்பதவியைப் பெறுவதற்குமனிதஉடல்தாங்கியே, வேண்டியவற்றை அனுசரிக்கவேண்டும். இதனால் தேவப்பிறவியிலும்பார்க்க மனிதப் பிறவி முக்கிய தன்மையுடையதாகின்றது. உலகில் மலர்ச்சி (EVOLUTION)முறைப்படியும் மனிதனே உலகில்உள்ள மற்றைய பிறவிகள் எல்லாவற்றிலும் மேலானவன் ஆகின்றான். பிரமன், படைப்பில், மனிதனிலேயே தனது எல்லாத்திறமையையும் காட்டியிருக்கின்றான்போலும்.

இம்மனிதப்பிறவியிலேயே, இன்பம், துன்பம், ஆகிய இரண்டையும் கலந்து அனுபவிக்கமுடியும். நூல்கள் காட்டும் நரகர்க்கும் தேவர்க்கும் அப்பேறு இல்லை. உலகில்உள்ள உயிர்வாழ்

---

முற்பக்கத்தொடர்ச்சி.

அவ்வுதயத்தாற்களங்கமற்ற ககனம் சூரியோதயத்தால் எங்ஙனம் துலங்குகின்றதோ அங்ஙனமான துலக்கத்தை, சுகாரம்பப்பெருவெளியைசுகபரிபூரண நிலையை மனமானது காணும். அப்பொழுது தான் அவ்வான்மாவின் சுவரூபநிலைவிளங்கும். அந்நிலையிலேயே "பெருவெளியாய் ஐம்பூதம் பிறப்பிடமாய்" பேசாதபெரியமோனம் வருமிடமாய் மனமாதிக்கெட்டாதபேரின்பமயமாய், நிற்கும் அகண்டாகாரசச்சிதானந்தப்பொருளின்நிலையும் விளங்கும். அப்பொருளே "காணுங்கண்ணிற் கலந்தகண்ணாய்" நின்று உள்ளதையுள்ளபடியுணரச் செய்து உறுதிகூட்டிற்றென்பதை ஆன்மா தெள்ளிதினுணரும். வாழ்கபரம்பொருள்.

——

வனவற்றை நோக்கினுல் மனிதனே அநுபவம் அனுமானம் ஆய்வு ஆகியவற்றைப்பயன்படுத்தி வாழ்கிருன் என்றும், மற்றையபிறவி களின் வாழ்வுபெரும்பாலும்சிலஊக்கங்களைப்பொறுத்தன என்றும் அறிகின்ருேம். இதனுல் மனிதன் ஒரு அளவுக்குத்தனது இன்பதுன்பங்களைக்கட்டுப்படுத்தி நடக்கக்கூடிய வல்லமைபடைத்தவனுகிருன்.

பிறப்பு, இறப்பு, இன்பம், துன்பம் ஆகியவற்றைப்பற்றிய அறிவும் மனிதனைத்தவிர வேறுஎப்பிராணிக்கும் கிடையாது. ஒன்றும் அறியாமனிதனுக்கு வருத்தமென்ருல் அவனுக்கு நோயின் வருத்தம் ஒன்றே ஒன்றுதான் உண்டு. ஆனுல் அதேவருத்தம் ஓர்வைத்தியனைப்பிடிக்குமென்ருல் அவ்வைத்தியனுக்குப்பலமாக ப்பலவிதவருத்தங்கள் உண்டு என்பதைஎவரும்அறிவர். இதே போலத்தான் மனிதனும் நாம் காணும்பிறவிகளில் மனக்கவலையுள்ளபிறவி மனிதப்பிறவியொன்றே. ஆனுல் இம் மனக்கவலையுள்ள மனிதப்பிறவிக்கே மதமும் அரியபெருந்துணை செய்கின்றது.

இன்பமும்துன்பமும் மாறிமாறி வருவன. துன்பத்தைவிடுத்து, இன்பம் பெறுதற்குரிய வழிவகைகளைக்கண்டனர். பெரியோர். இங்கேஇன்பம் என்று குறிப்பிடுவது பேரின்பமேயன்றி, உலகாயதர் நாடியசிற்றின்பம் அன்று. பேரின்பத்தையும், அதனைப்பெறுதற்குரிய நெறிகளையும், பேர் அறிஞர், முனிவர்முதலானோர் ஆராய்ந்து முடிவுசெய்தனர். அம்முடிவுகளே மதங்களாகும். மதங்களுட்சில மக்களுட்சிறந்தோரால் அமைக்கப்பட்டன. உலகாயதம், ஆருகதம், பௌத்தம் போன்றவை இப்பகுப்பைச் சேர்ந்தவை. சாங்கியம், யோகம், மீமாம்சை வேதாந்தம் முதலியவை முனிவர்களால் வகுக்கப்பட்டன. பாசுபதம், இரணிகருப்பம் போன்றவை தேவர்களால் அமைக்கப்பட்டன எனக்கூறுவர். ஆனுற்சைவமோ, முழுமுதற்கடவுளாகிய சிவபெருமானுல்அருளிச்செய்யப்பட்டது. இதனுலேயே இது சைவம் எனப்பெயர்பெற்றது.

மதங்களிற்சில ஒருகடவுளையோ அல்லது பல கடவுளர்களையோ ஒப்புக்கொள்வனவாகஉடையன. உதாரணமாக இந்து மதத்தை எடுத்துக்கொள்ளலாம். சிலகடவுள் உண்டு என்பதை

மறுப்பவை. அவை உலகாயதம், சமண், ஆதிபௌத்தம் போன்ற நாஸ்திகசமயங்களாகும். இன்னுமோர்வேறுபாடுகாணலாம். வேதங்களையும் பழையநூல்களையும் ஏற்றுக்கொள்வனசில. வேதங்களையும் கிரிகைகளையும் மறுப்பனசில. பௌத்தம் உலகாயதம், உதாரணமாகும். சிலமதங்கள் ஆன்மா உண்டு என்றும் சில ஆன்மாஎன ஒன்று இல்லையெனவும் கூறுவன. இப்படியாக மதங்கள் பலவிதமான கொள்கைகளில் பலவகையாக மாறுபடுவதைக் காணலாம்.

மதங்களின் தோற்றங்கள், கொள்கைகள் எவ்வாறு வேறுபட்டாலும், அவைபெரும்பாலும் மனிதனின் முன்னேற்றத்துக்குத் துணைசெய்வதே மூக்கிய நோக்கம். தனித்து மனிதனுக்கே இன்பங்காட்டும்உலகாயதமும் இக்கடமையில் ஒருவாறு தவறுமல் இருந்தது. ஆனல் அதிகமான மதங்கள் இன்னொருஉலகம்உண்டுஎன்றநம்பிக்கையுடையன. மறுபிறவியும், மறுஉலகமும்உண்டு என்ருல் பாவமும் புண்ணியமும்தாமாகவேவந்துவிடும் அல்லவா. பாவம்—"உயிருக்கு அதம் செய்தல்," புண்ணியம்—"உயிருக்கு இதம்செய்தல் என்றஇரண்டின் தன்மைகளையும், அவற்றின் விளைவுகளையுமே மதம் மனிதனுக்கு மூக்கியமாக எடுத்துக்காட்டுவது.

மனிதனில் மிருகத்தன்மை இருக்கின்றது. அவனின் அந்தக்கரணங்களும் புலன்களும் அவனை ஏமாற்றி விடுகின்றன. ஐந்து புலன்களும் கொடுஞ்செயல்புரியும், ஆசைமிகுந்த வேடர்கள். மனமோ ஒருநிலையற்றதும், கண்டமரங்கள் எல்லாவற்றிலும் தாவிப் பாயும் அடங்காதகுரங்கு. புத்தியோ, சேர்ந்தபொருளின் தன்மையைப்பெறும் நீர்போலத்தனது குணம் குன்றிவிடுகின்றது; சித்தமோ வீடு எரிக்கும் இராசாவுக்கு நெருப்புக்கொடுக்கும் மந்திரி; அகங்காரமோ கானல் நீரைநாடி ஓடும் உண்மைஅறியாத மான். இப்படியான கேவலமான நிலையில் இருக்கின்ருன் மனிதன்,

இந்த ஆபத்தானநிலையிலிருக்கும் மனிதனுக்கு நல்லுதவிபுரிவது உண்மையான நற்சமயமேயாகும் பாபத்தைஒழித்துப் புண்ணியத்தைதப்புவிமேல் ஓங்கச்செய்வதே மதத்தின் நோக்கம். இந்நோக்கத்தை நிறைவேற்றுதற்பொருட்டே மதத்தில் உள்ளநால்

கள் ஆக்கப்பட்டனஎனலாம். மனிதனின் உண்மை நிலையைப் புலப்படுத்தி, அவனை நல்வழிப்படுத்துதற்குத் தூண்டலாக இருப்பன அப்பெருநூல்களே. அவை இறைவன் பேரில் பாடப்பட்டு இருக்கலாம். ஆனல் எல்லாம் சாதாரண மனிதன் அறியக்கூடியவையும் அவனுடைய மனதைக்கவரக்கூடிய தன்மையுடையவையும் ஆகா. உணவுக்குத்தொட்டுக்கொள்வதற்குக்கறிகள் வைப்பதுபோல், சமையநூல்களிலும், வீரம், காதல், தண்டனை, வெற்றி முதலியகவர்ச்சிக்கிடமானவையெல்லாம் சேர்த்தெழுதப்பட்டிருக்கின்றன. உலகத்தைப்பார்த்தால் தட்டையாகத்தான் தோன்றுகிறது. உற்று நோக்கிப்பார்த்தாற்றான் அது உருண்டை என்பதைஅறிகின்றோம். கண்டதைக் கண்டவாறும், கேட்டதைக்கேட்டவாறும் அதேபோல், மற்றையபுலன்கள் காட்டுவனவற்றை ஒரேயடியாக நம்புவது நமது சுபாபங்களுள் ஒன்று. இது நமக்கும் மிருகத்துக்கும் உள்ளதொடர்பையும், நம்மிலிருக்கும் மிருகத்தன்மையையும் காட்டுகின்றது. எதிலும் உண்மைகாண்பதே மனிதப்பிறவியின் இலக்கணம். அதைவிடுத்து, புராணமென்றால் கடவுள்ர்களின் காதல் காம விளையாட்டுப்பொக்கிஷம் என்றும் தேவாரம் பித்தர்பாடியபிதற்றல் என்றும் முடிவுகட்டுவது புத்திபக்குவம் அடையாது இருத்தலையே புலப்படுத்தும். இது ஒருபுறம்; மற்றொருபுறத்தில் அதிலும் பெருந்தீங்கு விளைகின்றது. சிலர்சமயநூல்களைத்தமதுசமூகவிரோதச்செயல்களுக்கு உதவியாகவும் கையாளுகின்றனர். பணப்பேய் பிடித்தாடும் மனிதரின்கையில் இன்று மதம்மாட்டிக்கொண்டுவிட்டது. எந்தமதத்தைஎடுத்தாலும், பணப்பெருக்கமே, முதல்நோக்கமாகக்காணப்படுகின்றது. கோவில்களைநடத்துவதற்கும் மற்றையசெலவுகட்கும் பணம்வேண்டியதுதான். ஆனல் பணத்துக்காகமதத்தைப்பலிகொடுப்பது என்றால்இதைவிட வேறு அநியாயம்உண்டோ? மதத்துக்காகப்பணமோ? அல்லது பணத்துக்காகமதமா? இறைவன் பலவடிவமாக மக்கட்கு உதவிசெய்வானென்று படித்து இருக்கின்றோம். ஆனல் இப்போ அவன் மதத்தின் மூலமும்வடிவந்தாங்கி ஒரு சிலருக்கு உதவிசெய்கின்றான்! இன்று மதங்கள் தமது நிலைகெடுவதற்குக்காரணம், மனிதன், பணத்தையும் மதத்தையும் ஒருநுகத்தில் பூட்டி அடிப்பதேதான். பணத்தையும் மதத்தையும் பூட்டிப் பேராசைக் கயிற்றினல் அடக்கி ஆணவம் சவாரிசெய்கின்றது.

---

# செய்தித் திரட்டு.

## பாலர் ஞானோதய சபை: தெல்லிப்பழை.

ஷெ சபை ஆதரவில் காசிவிநாயகர் ஆலயத்தில் 10-5-50-ல் திருநாவுக்கரசு நாயனார் குருபூஜையும் 2-6-50-ல் திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் குருபூஜையும் கொண்டாடப்பெற்றன.

## குருநாகல் சைவமகாசபை.

ஷெ சபையின் ஆதரவில் கட்டப்பட்ட புதுமண்டபத்திறப்புவிழா நீதிபதி உயர்திரு- S. இராசரத்தினம் அவர்கள் தலைமையில் 1-6-50 வியாழக்கிழமை நடைபெற்றது.

# அஞ்சல் ஒழுங்கு.

கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய ஆலயத்திலிருந்து மாசமொருமுறை சாயங்காலப்பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் அஞ்சல் செய்யப்பட்டு வரும்விஷயம் வாசகர்கள் அறிவார்கள். அதே ஒழுங்கு வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோவிலிலும்; கொம்பனித்தெரு சிவசுப்பிரமணியர் ஆலயத்திலும் இம்மாதம் தொடக்கம் செய்யப்பட்டுள்ளது. 6-6-50 செவ்வாய்க்கிழமை மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் திரு. மூ. சு. திருவிளங்கம் அவர்களால் வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. அவரே 16-6-50 வெள்ளிக்கிழமை கொம்பனித் தெருவிலிருந்து அஞ்சல் செய்யப்படும் கூட்டுவழிபாட்டை நடாத்துவாரென அறிந்துமகிழ்ச்சியடைகிறோம். தென்னாட்டிலுள்ள சைவாலயங்களில் இனியாவது இந்த அரியமுறைநகையாளப்படுமெனஎதிர்பார்க்கின்றோம்.

## களுத்துறையில் கூட்டுவழிபாடு.

களுத்துறையிலும் அதையடுத்துள்ள மத்துகம என்னுமிடத்திலும் மாசமொருமுறை கூட்டுப்பிரார்த்தனை ஒழுங்காய் நடைபெற்று வருகிறது. கோயிலோ, பொதுஸ்தானமோ இல்லாமையால் அபிமானிகளின் இல்லங்களிலேயே அன்பர்கள்கூடுகின்றனர். சென்றமாசம் [1?-5-50] களுத்துறை பிரபலவியாபாரி திரு. செல்லையாபிள்ளை அவர்களின் இல்லத்தில்நடந்தபிரார்த்தனைக்கூட்டத்தில் 'ஆத்மஜோதி" ஆசிரியர் 'எமது சமயத்தின் எதிர்காலம்' என்னும்விஷயம்பற்றி ஓர்சொற்பொழிவுசெய்தனர்.

Registered at the G. P, O, as a News Paper.


# புதுயுகநிலையம் புதுச்சேரி.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!!!

ஆத்மீக சாதகர்களுக்கு இரு பொக்கிஷங்கள்.

சுவாமி சுத்தானந்த பாரதியாரின்

தவத்தில் அரும்பிய இரு மலர்கள்

## அருட்செல்வம்.

தமிழர்களுக்கு 'பைபிள்' போன்றது, பாடசாலைகளிலும் வீடுகளிலும்மாணவருக்கும் வயது முதிர்ந்தோருக்கும் நித்திய பாராயணத்திற்கு ஏற்றது. கூட்டுவழிபாடுநடத்துவோருக்கு ஏற்றபாடல்கள்- ஆத்மீகப் பேச்சாளர் எடுத்துக்கையாளக்கூடிய அருமையான பாசுரங்கள்,

விலை ரூபா 2/- மாத்திரமே.

இலங்கை அன்பர்கள் 12 பேர் ஒன்றுசேர்ந்து எழுதினால் V. P. மூலம்வந்துசேர ஒருபுத்தகம் 2ரூபாய் ஆகின்றது, தனித்தனி V P. மூலம் பெறுவதாயின் 3ரூபாவுக்குக்கிட்டவரும். சமுகமுன்னேற்றச் சபைகள், சங்கங்கள் V. P மூலம் தொகையாக எடுத்து உரியவிலைகளுக்கு அன்பர்களுக்கு வழங்கலாம்.

## ஆத்மசோதனை.

சுத்தானந்தரின் அனுபவங்கள்.

விலை ரூபா 5/—

தமிழுலகம் ஆவலாக எதிர் பார்த்த 'ஆத்மசோதனை' வெளிவந்துவிட்டது. 500பக்கங்கள்கொண்ட அழகிய நூல்- சுவாமிகளின்பிறந்த நாளாகிய மேமாதம் 11-ந்திகதி திருவிழாநடத்தி சுத்தசங்கம் சுவாமிகளுக்கு அளித்தது. சுவாமிகளின் நூல்களையும் கொள்கைகளைப் பரப்பவே சுத்தசங்கம் சென்னையில்உருவாகிறது, 'ஆத்மசோதனை வேண்டுவோர்; 'சுத்தசங்கம்' வான்கார்டு பில்டிங்; 2 லைன்பீச், மதராஸ் என்றவிலாசத்திற்கு அல்லது புதுச்சேரி 'புதயுக' நிலயத்திற்கு எழுதிப்பெற்றுக்கொள்ளலாம்.



கௌரவ ஆசிரியர் க. இராமச்சந்திரன், பதிப்பாசிரியர் நா. முத்தையா

'ஆத்மஜோதி" நிலயம் நாவலப்பிட்டி, [சிலோன்]

நாவலப்பிட்டி; சரவணபிறவில் பதிப்பித்தது, 15—6—50